பிரிவின் கீழ் உள்ள விளம்பர அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 19—8—1971 நாளிட்ட 1654 ஆம் எண் அரசு ஆணையில் ஏற்கப்பட்டு 15—9—1971 நாளிட்ட பாகம் -வது பிரிவு 1 தமிழ்நாடு அரசிதழில் 869-ம் பக்கத்தில் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டது. இதற்குமேல் அவார்டு அளிப்பது, நிலத்தை கையகப்படுத்தி பிரித்து அரிசனங்களுக்கு அளிப்பது அரிசன நல தனி தாசில்தார், மாவட்ட ஆட்சியர் இருவரின் பொறுப்பாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஆண்டிபாளையம் என்ற கிராமத்தில் பொதுமக்களுக்கு வீட்டு மனைக்குரிய இடத்தைக் கையகப்படுத்திக் கொடுப்பதற்கான பிரச்னை 1967 ஆம் ஆண்டிலிருந்தே நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுத்து இதை நிறைவேற்றுவதற்கு விரைவில் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்களுக்காக முதலிலே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தைக் கையகப்படுத்தவேண்டுமென்ற நிலைமையிலே இருக்கும்பொழுது அவர்களாக முன்வந்து அந்த இடத்தை வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். பிறகு அந்த இடத்தை காளிபாளையம் கிராமத்திலுள்ளவர்களுக்குக் கொடுக்கலாமா என்று உத்தேசம் இருந்தது. ஆனால் அவர்களும் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அடுத்தபடி 46/7 ஏ இல் உள்ள இடத்திலே ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்தைக் கையகப்படுத்தி பட்டா செய்வதற்கு திட்டம் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திப்பட்டியிலுள்ள அரிசனங்களுக்கு குடிநீர்

* 539 வின.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மத்திப்பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடிநீர் வழங்க மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எப்போது துவக்கப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971-ம் ஆண்டு சனவரி திங்களில் துவக்கப்பட்டது.

(இ) தற்போது கீழ்த்தளம் வரை கட்டப்பட்டுள்ளது. மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியைக் கட்டுபவர் பாதி வேலையில் நின்று விட்டதனால், அவருடைய ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு நபர்மூலம் வேலையை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.

1972 மார்ச் 17]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுக்காலமாகவே அந்த மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிப் பிரச்னையில் காலதாமதம் ஏற்பட்டுவருகிறது. அந்தப் பகுதிகளிலே உள்ள காண்டிராக்டர் களிடத்திலேயே இதுபோன்ற வேலைகளை ஒப்படைத்தால் அவர்கள் விரைவிலே முடித்துவிடுவார்கள். ஆகவே அந்த அந்த டிவிஷனில் உள்ளவர்களிடமே வேலை களைக் கொடுத்து மிக விரைவிலே முடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கலெக்டர் அவர்கள் ஒப்பந்தக் காரரிடத்திலே விரைவிலே முடிக்கவேண்டுமென்று கொடுத்தார்கள். ஆனால் அந்த ஒப்பந்தக்காரர் பாதி வேலையை செய்துவிட்டு பாதியை முடிக்காமல் விட்டுவிட்டார். பல்வேறு தாக்கீதுகள் விட்டு பிறகு அவருடைய ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது. இப்பொழுது வேறு ஒப்பந்தக்காரரிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே முடிக்கப்படும்.

Shanmugar Mills at Rajapalayam.

* 540 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Rajapalayam citizens demonstrated on 28—8—1971 demanding re-opening of Shanmugar Mills; and

(*b*) the steps taken for re-opening the said mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்த ஆலையின் தொழிலாளர்கள் இந்த ஆலையை திறக்கும்படி அரசை வேண்டிக் கொண்டனர்.

(இ) இந்த ஆலை 1—11—1971 முதல் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இராஜபாளையம் சண்முகர் நூற்பாலை திறந்து ஓடுவது மகிழ்ச்சிகரமான விஷயம். இருந்தபோதிலும் திறக்கின்ற நேரத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டபடி இல்லாமல் இன்னும் ஐந்து ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் 8 மணி வேலைக்குப் பதிலாக 9 மணி நேரம் வேலை வாங்குகிறுர்கள். பெண்களையும் அதிகாலையிலே வேலைக்கு வரச் சொல்லி வற்புறுத்துகிறுர்கள் என்ற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர் களிடத்திலே தனியாகக் கேள்வி போடவேண்டும்.